செய்தி வெளியீடு எண் : 41 நாள் : 26.01.2016

**இராமநாதபுரம் மாவட்டம்**

**அத்தியூத்து ஊராட்சியில் நடைபெற்ற கிராம சபைக்கூட்டத்தில்**
**மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர் ச.நடராஜன், இ.ஆ.ப., அவர்கள் பங்கேற்றார்.**

**...........**

இராமநாதபுரம் மாவட்டம், இராமநாதபுரம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட அத்தியூத்து ஊராட்சியில் இன்று (26.01.2016) குடியரசு தினத்தை முன்னிட்டு நடைபெற்ற கிராம சபைக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் ச.நடராஜன், இ.ஆ.ப., அவர்கள் சிறப்புப் பார்வையாளராக பங்கேற்றார்.

மாவட்ட ஆட்சித்தலைவர் கிராம சபைக் கூட்டத்தில் பங்கேற்று பேசியதாவது:

இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள 429 கிராம ஊராட்சிகளிலும் இன்று குடியரசு தினத்தை முன்னிட்டு கிராமசபைக் கூட்டம் நடைபெறுகிறது. கிராமத்திற்கு தேவையான அனைத்து அடிப்படை வசதிகளை கண்டறிந்து பொதுமக்களின் முன்னிலையில் விவாதித்து மக்களின் முழு ஆதரவோடு ஒரு மனதாக தீர்மானம் நிறைவேற்றிடும் வகையில் கிராமசபைக் கூட்டங்கள் நடத்தப்படுகின்றன. கிராமப்புறங்களில் அடிப்படை வளர்ச்சியில் தன்னிறைவு அடையும் போது நாட்டின் வளர்ச்சிக்கு முக்கிய பங்களிப்பாகிறது.

தமிழக அரசு கிராமப்புறங்களில் ஏழ்மை நிலையில் வாழ்கின்ற ஏழை, எளிய மக்கள், இளைஞர்கள், ஆதரவற்றவர்கள், விதவைகள், மாற்றுத்திறனாளிகள், ஆகியோரிகளின் பொருளாதாரத்தை முன்னேற்றும் வகையில் மகளிர் திட்டத்தின் மூலம் ஏழை, எளிய மக்கள் தொழில் தொடங்கிட எண்ணற்ற பல்வேறு பயிற்சியளிக்கப்பட்டு அவர்களின் வாழ்வை மேன்டையச் செய்து வருகிறது. கிராமசபை கூட்டங்கள் நடத்தப்படுவதன் மூலம், தமிழக அரசால் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு நலத்திட்டங்களின் பயன்கள் பொதுமக்களை சென்றடைந்துள்ளதா என்பதனை அறிய முடியும்.

கிராமப்புறங்களில் வசிக்கும் பொதுமக்கள் வெளிப்புறங்களில் மலம் கழிப்பதை அறவே தவிர்க்க வேண்டும் என்பதற்காகவும், சுகாதாரமான தமிழகத்தினை உருவாக்கிட வேண்டும் என்பதற்காவும் தமிழக அரசு ஊரக வளர்ச்சி முகமையின் மூலம் கிராமத்திற்கு தேவையான தனிநபர் கழிப்பிட வசதி, ஆண், பெண் இருபாலருக்கும் தனித்தனியாக கழிப்பிட வசதிகள் செய்து தர தயாராக உள்ளது. பொதுமக்கள் மலம் கழிப்பதற்கு திறந்த வெளிகளை பயன்படுத்தாமல் இத்திட்டத்திற்கு முழு ஒத்துழைப்பு கொடுக்க வேண்டும் என்றும், சுற்றுப்புறங்களை சுகாதாரமான வைத்து, கொசுக்களின் உற்பத்தியை தடுப்பதன் மூலம் டெங்கு போன்ற வைரஸ் காய்ச்சல் பராவாமல் தடுத்திடலாம். எனவே, இக்கிராமத்தில் வசிக்கும் பொதுமக்கள், தாங்கள் வசிக்கும் சுற்றுப்புறங்களை தூய்மையாக பராமரித்து, ஆரோக்கியமாக வாழ வேண்டும் என மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் ச.நடராஜன், இ.ஆ.ப., அவர்கள் பேசினார்.

முன்னதாக கிராமசபைக் கூட்டத்தில் பங்கேற்ற அனைவரும், மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் ச.நடராஜன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், வாக்காளர் தின உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.

இக்கிராம சபைக் கூட்டத்தில், ஊராட்சிகளின் உதவி இயக்குநர் திரு.கல்யாண சுந்தரம், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி) திரு.நாகரத்தினம், இராமநாதபுரம் ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் திருமதி.சாந்தி சாத்தையா, ஊராட்சிமன்றத் தலைவர் திருமதி.உம்முல் பைலூனா, அரசு அலுவலர்கள், பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம் மாவட்டம்**